**இலங்கை மின்சா சபை ஊழியர் சேமலாப நிதியம் - 2023**

---------------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை மின்சா சபை ஊழியர் சேமலாப நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலாபங்கள் மற்றும் நட்டங்கள் கூற்று விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் மற்றும் பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1321/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமாணியின் 23(iii) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் பந்தி 1.5 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களைத் தவிர, 2023 திசெம்பர் 31 இல் உள்ளளவாறான நிதியத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சலை உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் பந்தி 1.5 இல் குறிப்பிடப்பட்ட விடயங்கள் மீது என்னுடைய அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாகவுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையில் கணக்குகளை வைத்திருத்தல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, நிருவாகத்துடன் தொடர்புபட்ட தரப்பினர்களினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கம் ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாக மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிதியம் தொடர்ந்தியங்குவது தொடர்பான அடிப்படையினை ஈடுபடுத்தும் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல்

வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எனது முடிவுரைகளானது கணக்காய்வாளரின் அறிக்கைத் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் மீதான அடிப்படையிலானதாகும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பிலான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்குடன் இணங்காமை (SLAS/SLFRS)

| | உரிய கணக்கீட்டு நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமங்கள் எல்லை பரிமாணம் 2020 இல் வெளியிடப்பட்ட நிதி அறிக்கையிடலிற்கான எண்ணக்கரு கட்டமைப்பு பிரகாரம், அறிக்கையிடல் பதிவுக்கு உட்படுத்தப்பட்ட சகல செலவினங்கள் மற்றும் சொத்துக்களும் அறிகையிடல் பதிவின் நிதிக்கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டிற்கான ரூபா 54.44 மில்லியன் தொகையான செயற்பாட்டுச் செலவினம் | நிதி அறிக்கையிடலின் எண்ணக்கரு கட்டமைப்பிற்குள் விடயத்தின் அறிக்கையிடல் நிதியாண்டிலிருந்து உறுதிப்டுததல் அமுலாக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கியொழுக வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிதியத்திற்கு நேரடியாக உட்படுத்தி யிருந்ததுடன் நிதியத்தால் பயன்படுத்திய ரூபா 6.73 மில்லியன் தொகையான என்பத்தியெரு நிலையான சொத்துக்கள் மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்டு வெளிப்படுத்தியிருக்கவில்லை. | | |
| (ஆ) | இலங்கை மத்திய வங்கி வைப்பு முறைமையில் நிதியத்தின் பெயரின் கீழ் வந்திருக்காத முதலீடுகள் தொடர்பில் பிணைமுறிகளிற்கு பெறவெண்டியிருந்த ரூபா 2,772.76 மில்லியன் தவறவிடப்பட்ட வட்டி உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மொத்த பெற வேண்டியவைகளில் இருந்த என்ரஸ் செக்குரீஸ்டீஸ் PLC இல் செய்யப்பட்ட முதலீட்டின் அறவீட்டுத் தன்மை ஐயத்திற்கிடமாகவுள்ளது. மேலும், நிதிக்கூற்றுக்களின் குறிப்பு 11.2 இன் கீழ் இந்த விடயம் வெளிப்படுத்தப் பட்டிருந்தது. எவ்வாறாயினும் முதலீடுகளின் எதிர்பார்க்கப்பட்ட கடன் நட்டங்களை பகுப்பாய்வு செய்த பின்னர் நிதிக்கருவிகள் மீதான இலங்கை கணக்கீட்டு நியமங்களின் (SLFRS 09) 5.5 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் முழுவதற்கும் ஏற்பாடுகள் செய்வதற்கு பதிலாக மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் ரூபா 615.28 மில்லியன் கடன் கழிவு ஏற்பாடு மாத்திரமே செய்யப்பட்டிருந்தது. | விடயம் மீது வழக்காடுதல் செயற்பாட்டில் உள்ளதுடன் அதற்காக ஏற்பாடு செய்வதற்கு பதிலாக நிதியத்தின் வருடாந்த வருமான கூற்றின் ஊடாக சொல்லப்பட்ட முதலீட்டுகள் மீது ஏதாவது கடன்கழிவு நட்டங்களிற்கு எதிராக முதலீட்டு ஒதுக்கம் செலவு வைக்கப்பட்டிருந்தது. 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டில் இது ரூபா 2,157,483,000 ஆக இருந்தது. | -மேற்படி- |
| (இ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்நாட்டு இறைவரி திணைக்களத்திடமிருந்து பெறப்பட்ட வரிவிதிப்பு அறிக்கையின் பிரகாரம், 2018/2019 வரி மதிப்பீட்டின் பிரகாரம் வரிமதிப்பீட்டு ஆண்டிற்காக நிதியத்தின் கூட்டு வருமான வரிக்கான மேலதிக வரி மதிப்பீட்டு அறிவித்தல் வழங்கப்பட்டிருந்ததுடன் செலுத்த வேண்டிய மிகுதி வரி, செலுத்த வேண்டிய வட்டி மற்றும் செலுத்த வேண்டிய தண்டப்பணமாக ரூபா 913.07 மில்லியன் கூட்டுத் தொகை இருந்தது. எவ்வாறாயினும், நிதியம் வரி மிப்பீட்டுடன் உடன்பட்டிருக்காததுடன் விடயம் மீது நிர்வாக மீளாய்வினை | வரி மதிப்பீடு IRD இன் RAMIS ஐ நாளதுவரையாக்காமையால் அசட்டையால் வழங்கப்பட்டதுடன் IRD ஆனது முறைப்படி தெரிவித்திருந்தது. எனவே, PF ஆனது WHT கொடுப்பனவு மீது செலுத்த வெண்டிய வட்டி மற்றும் செலுத்த வேண்டிய தண்டப்பணம் செலுத்த வேண்டியதாக இருக்கவில்லை. எனவே, நிகழத்தக்க பொறுப்புகள் எதுவும் இருக்காததுடன் ஏற்பாடுகள், நிகழத்தக்க பொறுப்புகள் மற்றும் நிகழத்தக்க சொத்துக்கள் மீதான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (LKAS 37) 86 ஆம் பிரிவின் | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டியிருந்தது. எவ்வாறாயினும் இந்த தகராறு மீளாய்வாண்டு இறுதி வரையும் தீர்க்கப்பட்டிருக்காததுடன் தகராறு வருமான வரி மீதான இலங்கை கணக்கீட்டு நியமங்களின் (LKAS 12) 88 ஆம் பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை. | பிரகாரம் நிகழத்தக்க பொறுப்புக்களின் தன்மையை வெளிப்படுத்துவதற்கு வேண்டப்பட்டிருக்கவில்லை. | |
| (ஈ) | 2022 பெப்ரவரி 01 இல் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தால் வழங்கப்பட்ட கடிதத்தின் பிரகாரம், நிதியமானர் 2022 பெப்ரவரி 15 அல்லது அதற்கு முன்னர் VAT அதிகாரச் சட்டத்தின் 25A பிரிவிற்கமைய நிதிச் சேவைகளில் பெறுமதி சேர் வரிக்காக பதிவதற்கு அறிவித்திருந்ததுடன் VAT அதிகாரச் சட்டத்தின் 25A பிரிவின் 03 ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டவாறு கட்டாய பதிவு செயற்பாட்டிற்கு இணங்கி பதிவதற்கு தவறியிருந்தது. எவ்வாறாயினும், நிதியம் மீளாய்வாண்டு இறுதிவரையும் நிதிச் சேவைகள் வழங்குவதில் VAT இற்காக பதிவு செய்யப்பட்டிருக்காததுடன் அந்த தகராறு வருமான வரி மீதான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (LKAS 12) பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இது 2022.02.21 ஆந் திகதிய FM/AFM™/DFM(Tax)/Provident Fund ஆம் இலக்க கடிதம் மூலம் AFM ஆல் சிரேஸ்ட பிரதி ஆணையாளருக்கு தொடர்புபடுத்தியிருந்தது. இதற்கு மேல், DFM (PF) 2022.02.21 ஆந் திகதிய கடிதம் மூலம் நிதி அமைச்சின் திறைசேரி செயலாளருக்கு இது வழங்குவதற்கு முகவரியிடப் பட்டிருந்தது. எனவே, ஏற்பாடுகள் நிகழத்தக்க பொறுப்புக் மற்றும் நிகழத்தக்க சொத்துக்கள் (LKAS 37). மீது இலங்கை கணக்கீட்டு நியமத்தின் 86 ஆம் பிரிவின் பிரகாரம் நிகழத்தக்க பொறுப்புக்கள் இருக்காததுடன் நிகழத்தக்க பொறுப்புக்களை செய்வதற்கு வேண்டுகை எதுவும் இருக்கவில்லை. | -மேற்படி- |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2024 பெப்ரவரி 13 இல் எடுக்கப்பட்ட முகாமைத்தவ குழு தீர்மானத்தின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக வெளிப்படுத்தப்பட்ட பங்கிலாபத்தில் 2024 சனவரி 01 முதல் 2024 பெப்ரவரி 13 வரையான காலத்தின் போது ஓய்வுபெற்றிருந்த உறுப்பினர்கள் தொடர்பில் ரூபா 122 மில்லியன் தொகையான பங்கிலாபம் மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் நிதிக்கூற்றில் கணக்கீடு செய்யப்பட்டிருக்காததுடன் அந்த | அந்த உறுப்பினர்கள் ஓய்வுபெறும் பொது 2023 ஆம் ஆண்டிற்கான பங்கிலாபம் வெளிப்படுத்தப்பட்டது. சொல்லப்பட்ட பங்கிலாபத் தொகை நிறுத்தி வைத்த இலாபத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. | பங்கிலாபம் வெளிப்படுத்தப்பட வேண்டியதுடன் மீளாய்வாண்டிற்கான இலாபத்தில் தகுதியுடைய உறுப்பினர்களிற்காக வழங்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகை 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிறுத்தி வைத்த இலாபத்தின் மீதியில் பிரதி நிதித்துவப்படுத்தியிருந்தது. | | |
| (ஆ) | 2024 மார்ச் 03 இல் நிதியத்திற்கு பெறப்பட்டிருந்த மீளாய்வாண்டின் போது முதிர்ச்சியடைந்த அழைப்பு வைப்புக்களின் ரூபா 1.88 மில்லியன் தொகையான வட்டி வருமானம் தவறாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் பெறவேண்டியவ ட்டியாக காட்டுவதற்குப் பதிலாக திரண்ட கிரயங்களின் முதலீடாக காட்டப்பட்டிருந்தது. எனவே, நிதிக்கூற்றுக்களில் முதலீடுகளின் பெறுமதி அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன் ஏனைய பெறவேண்டியவைகள் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | இது வங்கியால் தவறவிடப்பட்டிருந்த மக்கள் வங்கியில் முதலீடு செய்யப்பட்ட குறிப்பு இல. 204-60-01-000350061-2 நிலையான வைப்பு தொடர்பில் ரூபா 1.9 மில்லியன் வட்டி வருமானமாகும். பல நினைவூட்டல்களின் பின்னர் சொல்ப்பட்ட தொகை 2024 மார்ச் 03 இல் நிதியத்தின் வங்கி கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டது. | நிதிக்கூற்றுக்களை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| நீக்கப்பட்ட மற்றும் பதவிவறிதாக்கப்பட்ட உறுப்பினர்களின் தீர்க்கப்படாத மீதி காரணமாக மீளாய்வாண்டு இறுதியில் 3 ஆண்டுகளிற்கு மேலாக உறுப்பினர்களின் மீதிகளிற்கு எதிராக வழங்கப்பட்ட கடன்களிற்கு 128 செயற்பாடற்ற உறுப்பினர்களிடமிருந்து ரூபா 19.06 மில்லியன் தொகை பெற வேண்டியிருந்தது. அந்த தொகையில் 34 செயற்பாடற்ற உறுப்பினர்களிற்கு சேர்தமான ரூபா 9.5 மில்லியன் தொகை மற்றும் 86 செயற்பாடற்ற உறுப்பினர்களிற்கு சொந்தமான ரூபா 2.4 மில்லியன் முறையே 7 ஆண்டுகள் மற்றும் 31 ஆண்டுகளிற்கு மேலாக பெறவேண்டியிருந்தது. | செயற்பாடற்ற உறுப்பினர்களிற்கு வழங்கப்பட்ட கடன்கள் எங்களுடைய கணக்கேடுகளில் பதியப்பட்டுள்ளதுடன் செயற்பாடற்ற உறுப்பினர்களின் இறுதி தீர்ப்பனவை செய்வதற்கு தீர்ப்பனவு காலத்தில் தெளிவாக்கப்பட வேண்டும். | செயற்பாடற்ற உறுப்பினர்களின் நீண்டகால கடன் மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டியவைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | உரிய உறுப்பினர்களின் மீதிகளை விடுவிப்பதற்கு தேவையான ஆவணங்கள் சமர்ப்பிக்காமையால் மீளாய்வாண்டு இறுதியில் 3 ஆண்டுகளிற்கு மேலாக 588 நீக்கப்பட்ட உறுப்பினர்களிற்கு சொந்தமான ரூபா 107 மில்லியன் தொகை செலுத்த வேண்டியிருந்தது. அவற்றில் 307 நீக்கப்பட்ட உறுப்பினர்களிற்கு சொந்தமான ரூபா 56.8 மில்லியன் தொகை மற்றும் 124 நீக்கப்பட்ட உறுப்பனர்களிற்கு சொந்தமான ரூபா 1.9 மில்லியன் தொகை முறையே 7 ஆண்டுகள் மற்றும் 31 ஆண்டுகளிற்கு மேலாக செலுத்த வேண்டியிருந்தது. | இந்த மீதிகள் உரிய உறுப்பினர்களின் மீதிகளை விடுவிப்பதற்கு தேவையான ஆவணங்கள் சமர்ப்பிக்காமையால் நிதியத்தின் நிதிக் கூற்றுக்களில் பொய்யாக உள்ளது. ஆகவே, அந்த மீதிகள் இன்னமும் நிதியத்தின் பொறுப்பாக உள்ளமையால் பதிவழிக்க முடியாதுள்ளது. | நீண்ட காலம் நிலுவையாகவிருக்கின்ற உறுப்பினர்களின் மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 305 பதவி வறிதாக்கப்பட்ட உறுப்பினர்களிற்கு சொந்தமான ரூபா 5.1 மில்லியன் மொத்த தொகை மீளாய்வாண்டு இறுதியில் 6 ஆண்டுகளிற்கு மேலாக செலுத்த வேண்டியிருந்தது. | இது நீதி தீர்ப்பனவுகள் தீர்ப்பனவு செய்யப்படும் நேரம் தெளிவாக்கப்படும். | நீண்ட காலம் நிலுவையாகவிருக்கின்ற உறுப்பினர்களின் மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும |

### 1.7. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றிற்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) ஊழியர் சேமலாப நிதிய பிரமாணங்கள் | | | |
| (i) விதி 4 | ஒவ்வொரு உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்களும் ஊழியர்களுடைய சம்பளங்கள் அல்லது கூலிகளிலிருந்து முறையே 10 சதவீதம் மற்றும் 15 சதவீதம் நிதியத்திற்கு பங்களிப்பு செய்யப்பட வேண்டும். அடிப்படைச் சம்பளத்தின் வரையறைக்கு முரணாக அதேநேரம் நிதியத்திற்கான பங்களிப்பை கணிப்பீடு செய்கின்றது. CEB | ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்பு கணிப்பீடு செய்யப்படுகின்ற போது 2007 ஒக்தோபர் 23 ஆந் திகதிய DGM(P)/Policy/GS(1)/181 ஆம் இலக்க ஆளணிச் சுற்றறிக்கைக்கமைய திரண்ட சம்பளத்தின் ஒரு பகுதியாக உயர்ந்த படிகள் கவனத்திற் கொள்ளப்பட்டது. | சேமலாப நிதிய பிரமாணங்களுடன் இணங்கியொழுக வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஊழியர்களின் உயர்ந்த படிகள் உள்ளடங்கிய சம்பளங்கள் கருத்திற் கொள்ளப்பட்டிருந்தது. | | |
| (ii) விதி 22 | i. இந்த ஏற்பாடுகளிற்கு முரணான முன்னைய ஆண்டிற்கான பங்கிலாபம் முன்னைய ஆண்டு இறுதியில் இருக்கின்ற உறுப்பினர்களுடைய செலவு மீதிக்கு பதிலாக மீளாய்வாண்டு இறுதியில் இருக்கின்ற உறுப்பினர்களுடைய செலவு மீதியின் அடிப்படையில் செலுத்தப் பட்டிருந்தது. மேலும், 2022 ஆம் ஆண்டிற்கான பங்கிலாபம் இந்த ஏற்பாடுகளிற்கு முரணாக 2022 திசெம்பர் 31 இல் ஓய்வுபெற்ற உறுப்பினர்களிற்கு ஓய்வு பெற்றிருந்த சொல்லப்பட்ட 285 ஊழியர்களிற்கு 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான உறுப்பினர்களின் செலவு மீதிகளின் அடிப்படையில் செலுத்தப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. | ஓய்வுபெற்றிருந்த உறுப்பினர்களில் கடந்த ஆண்டினுடைய பங்களிப்பிற்காக பங்கிலாபம் திரட்டப்பட்டிருக்கவில்லை ஆகவே, விதி இல. 22 ஆல் வழங்கப்பட்ட நெறிப்படுத்தலுடன் இணங்கியுள்ளது. | -மேற்படி- |
| | ii. இந்த ஏற்பாடுகளிற்கு முரணான, 2023 சனவரி 01 இல் உள்ளவாறான ரூபா 13.29 பில்லியன் தொகையான நிறுத்தி வைத்த இலாபம் மற்றும் மீளாய்வாண்டிற்கான் பரிசோதனை கிரயம் மற்றும் வரி என்பவற்றின் பின்னரான தேறிய இலாபம் மாத்திரம் உறுப்பினர்களிற்கு இடையில் முழுமையாக பங்கீடு செய்யப்பட்டிருந்தது. | பங்கிலாப கணிப்பீடு நிதியத்திற்கு உருவாக்க வேண்டிய ஒதுக்கங்களை செய்தபின்னர் மற்றும் சாட்டுதல் செய்யவேண்டிய ஏதாவது செலவினங்களை கழித்த பின்னர் முறையாக செய்யப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (iii) Rule 31 | விதிகளின் திருத்தங்கள் காலத்திற்கு காலம் சபை தீர்மானங்களால் தொழில் ஆணையாளர் மற்றும் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் என்பவரின் | நிதியத்தின் இருக்கின்ற விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான திருத்தங்களை மீளாய்வு செய்வதற்கும் பரிந்துரை செய்வதற்கும் 2024 | -மேற்படி- |

| | |
|---|---|
| அனுமதிக்குட்பட்டு விதிகள் அல்லது அவற்றில் ஏதாவது திருத்தம், மாறுபாடு, மாற்றியமைத்தல் அல்லது அவற்றில் ஏதாவது திருத்தம் இலங்கை மின்சார சபைக்காக உதவியாக இருக்கும். எவ்வாறாயினும், தொழில் ஆணையாளர் மற்றும் உள்நாட்டு இறைவரி ஆணையாளரின் அனுமதி பெறப்பட்டிருக்காததுடன் முகாமைத்தவ குழுவின் அதிகாரம் மற்றும் கடமைகள், முதலீட்டு அதிகாரம், உறுப்பினர்களிற்கான கடன் போன்றன தொடர்பான விதிகள் திருத்தப்பட்டு இதன்படி செயற்படுதல் மீதான 2003 சேமலாப நிதியப் பிரமாணங்கள் வர்த்மாணி அறிவித்தலூடாக வெளியிடப்பட்டிருக்கவில்லை. | பெப்ரவரி 14 இல் நடைபெற்ற முகாமைத்துவ குழு கூட்டத்தில் சேமலாப முகாமைத்துவ குழுவில் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது. திருத்தப்பட வேண்டியிருந்த நிதியத்தின் இருக்கின்ற விதிகள் மற்றும் பிரமாண மாற்றங்களை குழு அறிக்கை சமர்ப்பித்துள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான சேமலாப நிதியத்தின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 15,580.82 மில்லியன் இலாபமாக இருந்ததுடன் நேரொத்த முன்னைய ஆண்டிற்கான நேரொத்த இலாபம் ரூபா 10,684.14 மில்லியனாகும் ஆகவே, நிதிசார் விளைவுகளின் ரூபா 4,896.68 மில்லியன் தொகையான முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் போது ரூபா 4,890.85 மில்லியன் வட்டி வருமானங்களின் அதிகரிப்பே முன்னேற்றத்திற்காக பிரதான காரணங்களாக இருந்தன.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடங்களின் போக்கு பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் பகுப்பாய்வானது அதிகரிப்பு அல்லது வீழ்ச்சி சதவீதமாக பின்வருமாறுள்ளன.

| வருமானம் / செலவினம் | 2023 | 2022 | அதிகரிப்பு) / (வீழ்ச்சி) | சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | % |
| வட்டி வருமானம் | 15,566 | 10,675 | 4,891 | 46 |
| ஏனைய வருமானம் | 28 | 18 | 10 | 55 |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் | 13 | 9 | 4 | 44 |

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளிற்கான நிதியத்தின் சில முக்கியமான தகவல்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| விகிதம் | 2023 % | 2022 % |
|---|---|---|
| தேறிய இலாப வீதம் (PAT) | 85.26 | 91.11 |
| சராசரி முதலீடு மீதான வருமான வீதம் | 23.37 | 13.71 |
| உறுப்பினர் மீதிகள் மீதான வருமான வீதம் | 14.38 | 11.65 |
| முடிவுறுத்தில் உறுப்பினர் மீதான பங்கிலாப வெளிப்படுத்தல் வீதம் | 16.12 | 12.84 |

சராசரி முதலீடு மீதான வருமான வீதம், உறுப்பினர் மீதிகள் மீதான வருமான வீதம் மற்றும் முடிவுறுத்தில் உறுப்பினர் மீதான பங்கிலாப வெளிப்படுத்தல் வீதம் என்பன ஆண்டின் போது முதலீடுகள் மீதான வட்டி வீதம் அதிகரித்தமையால் குறிப்பிடத்தக்களவு அதிகரீத்திருந்தது. எவ்வாறாயினும், ஆண்டின் போது ஏற்பட்ட ரூபா 2,285.97 மில்லியன் (2022 இல் ரூபா 941.9 மில்லியன்) வருமான வரி காரணமாக ஆண்டிற்கான தேறிய இலாப வீதம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 5.85 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையீனங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் என்ரஸ் செக்குரீட்டீஸ் PLC இன் (ESP) ஊடாக மூன்று திறைசேரி முறிகளில் ரூபா 2.3 பில்லியன் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் முதலீடுகள் தொடர்பான முறிகள் இலங்கை மத்திய வங்கி வைப்பு முறைமையில் நிதியத்தின் பெயரில் இருக்கவில்லை என்பது 2015 ஆம் ஆண்டில் வெளிப்பட்டது. எவ்வாறாயினும், அந்நேரத்தில் அவர்களுடைய தவறிற்காக நிதியத்தில் சேவையாற்றிய பொறுப்பான உத்தியோத்தரை அடையாளம் காண்பதற்கு அந்நேரத்தில் முறையாயன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் அவர்கள் இலங்கை மின்சார சபையிடமிருந்து ஓய்வுபெற்றுச் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர். இதன்படி, இலங்கை மின்சார சபை 2015 திசெம்பர் 09 இல் ESP இற்கு எதிராக நிதி குற்றப் புலனாய்வு பிரிவிற்கு (FCID) முறைப்பாடு பதிந்திருந்ததுடன் FCID ஆனது ESP இற்கு | இலங்கை மின்சார சபை சேமலாக நிதியம் சொல்லப்பட்ட முதலீட்டிற்காக முகப்பெறுமதி மற்றும் அவற்றின் மீதான தவறவிட்ட கூப்பன் வட்டியை அறவிடுவதற்கு கொழும்பு மாவட்ட நீதி மன்றத்தின் என்ரஸ் செக்குரீட்டீஸ் PLC இற்கு எதிராக சிவில் வழக்கு தொடுத்திருந்தது. CEB சட்டப்பிரிவிக஥ீன் ஒரு பகுதி வழக்கு இல. DMR/1405/2018 மற்றும் DMR/1029/2018 வழக்கு இலக்கங்களுடன் இரண்டு சிவில் வழக்குகளை தொடருவதற்கு கொழும்பு மாவட்ட நீதி மன்றத்திற்கு விண்ணப்பிக்கும் செயற்பாட்டில் உள்ளது. அதேநேரம் கம்பனி பதிவழிப்பு நடைமுறைக்கு CEB சேமலாப | (i) எதிர்காலத்தில் இத்தகைய நிகழ்வகளை தவிர்ப்பதற்கு முறையான உள்ளக கட்டுப்பாட்டை உருத்திப்படுத்த வேண்டும்.<br>(ii) ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவதற்கு சகல நியாயமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருந்தமையை உறுதிப்படுத்த வேண்டும்.<br>(iii) பொறுப்புடைய உத்தியோகத்தர்களின் தவறுகளிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

எதிராக வழக்கு தொடர்ந்திருந்தது. மேலும், இலங்கை மின்சார சபை முகப்பெறுமதி மற்றும் தவறவிட்ட கூப்பன் வட்டியை அறவிடுவதற்கு ESP இற்கு எதிராக சிவில் வழக்கு தொடர்ந்திருந்தது. 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் முதிர்வடைந்த முதலீடுகளின் முகப்பெறுமதி மற்றும் தவறவிட்ட கூப்பன் வட்டி ரூபா 2.8 பில்லயனாக இருந்ததுடன் இரண்டு வழக்குகளும் விசாரணையில் இருக்கின்றன.

நிதியம் மற்றும் ஓய்வூதிய நிதியம் செய்கின்றது.